THE HON. THIRU K. ANBAZHAGAN : Government is considering such cases sympathetically. But anyhow the Finance Department is not able to provide funds at the time when it is necessary. Therefore this has been postponed for the Part II scheme of 1971-72. The cost involved in the proposal is Rs. 61,400 per annum recurring expenditure and Rs. 10,000 is the non-recurring expenditure. Therefore the proposal to undertake it is postponed till after six months.

### மாயூரத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனை

*474 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்தில் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள மகப்பேறு மருத்துவ மனையினை அரசாங்கமே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மாயூரம் நகராட்சி இரண்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை நடத்த வேண்டிய நிலைமையிருப்பதால் நிதி வசதி போதாமல் இருக்கிறது. எனவே, மகப்பேறு மருத்துவமனையைச் சரிவர நடத்த இயலவில்லையாதலால் இனிமேலாவது அரசு மேற்கொண்டு நடத்த ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அப்படி நகராட்சிகளாலே ஏற்கனவே நடத்தப்பட்டு வருகிற மருத்துவ மனைகளை அரசுப் பொறுப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் இருக்கிறது. ஆனால் அரசு ஏற்கனவே அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்கு ஆகின்றவற்றில் நான்கில் ஒரு பங்கை கிராண்டாக வழங்குகிறது. இந்த மகப்பேறு குழந்தைகள் மருத்துவ மனைக்கு 67-68-இல் 5,989 ரூபாயும், 68-69-இல் 6,415 ரூபாயும், 69-70-இல் 6,456 ரூபாயும் அரசாங்கத்தின் மூலமாக அதற்கான நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படி நிதி உதவியிலே இயங்கும் பல்வேறு மருத்துவ மனைகள் நாட்டிலேயிருப்பதால் அவற்றையெல்லாம் உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ள அரசாங்கத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லை.

### முதுநிலை மருத்துவ அதிகாரிகள்

*475 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிராமப்புறங்களில் மருத்துவச் சிகிச்சையை மேம்படுத்துவதற்காகச் சென்னை மாநகரில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் முதுநிலை மருத்துவ அதிகாரிகளை வெளியூர்களுக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.